

பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், பால்வளத்துறையின் மதுரை ஒன்றியத்திற்கு ஏப்ரல் – 2024 முதல் மார்ச் – 2025 வரை பால் வழங்கிய 632 சங்கங்களைச் சேர்ந்த 9,766 பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.5.63 கோடி மதிப்பில் ஊக்கத்தொகை வழங்குவதன் அடையாளமாக, நேற்று (17.10.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 5 பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலையினை வழங்கினார். இந்நிகழ்வில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு செயலாளர் மருத்துவர் ந.சுப்பையன். அ.ஜான் லூயிஸ், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் எடுத்த முயற்சியின் காரணமாக

# பல இலட்சம் பேருக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது!

## பேரவையில் உறுப்பினர் தி.வேல்முருகன் கேள்விக்கு அமைச்சர் சு.முத்துசாமி பதில்!

சென்னை, அக். 18–

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் தி. வேல்முருகன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அளித்த பதிலும் வருமாறு:–



**தி. வேல்முருகன்:** ஓர் அரசு இந்த மண்ணில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்குமாக குடிசையில்லாத தமிழகம், வீடு இல்லாத குடும்பங்கள் இருக்கக்கூடாது என்கிற உயரிய நோக்கத்தோடு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரில் வீடுகளைக் கட்டித் தருகிறோம். ஒன்றிய அரசு பாரத பிரதமர் அவர்கள் நிதியில் வீடுகளைக் கட்டித் தருகிறோம். ஆனால் சமீபகாலமாக தமிழ்நாட்டில் ஏழையெளிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சிறுபான்மையின மக்கள், விளிம்பு நிலையில் வாழ்கின்ற மக்கள், அரசு புறம்போக்குகளில் அல்லது அதை சார்ந்து நீர்நிலைகளில் வாழ்கிறார்கள் என்று உயர் நீதிமன்றங்களில், உச்ச நீதிமன்றங்களில் பொதுநல வழக்குகள் தொடக்கப்பட்டு, இடித்து தரைமட்டமாக்கப்படுகிறது.

நேற்றுக்கூட கண்ணீரோடு நூற்றுக்கணக்கான மக்கள் அந்த அவலத்தின் குரல் இன்றைக்கு எல்லா mediaகளிலும் வெளி வந்திருக்கிறது. குறிப்பாக, என்னுடைய தொகுதியில் பண்ருட்டியிலும், நெல்லிக்குப்பத்திலும் 500 வீடுகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டிருக்கின்றன. அப்படி இடிக்கப்படுகின்ற அந்த வீட்டிற்கு மாற்று வீட்டை தங்கள் துறையின் சார்பாக ஏற்பாடு செய்துவிட்டு, வருவாய்த் துறையோடு பேசி, ஆக்கிரமிப்புகள் இருந்தாலும், தீர்ப்புகள் இருந்தாலும் அதை சமன் செய்து அவர்களுக்கான ஒழுகாத வீட்டை தந்துவிட்டு, அதுபோன்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்ற நடவடிக்கையை எடுப்பதற்கு ஒரு விரிவான திட்ட அறிக்கையை தயார் செய்ய வேண்டும். வீட்டு வசதி மற்றும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் வீடு இல்லாத ஏழையெளிய, அரசு இடங்களில் குடியிருக்கிற மக்களை, வெளியே அகற்றாமல், தற்போது மழைக்காலம் என்பதால் அவர்கள் எங்கு சென்று வாழ்வார்கள். அந்த வலியை உணர்ந்து அதற்குரிய திட்டங்களைத் தீட்டுவதற்கு அரசிடம் திட்டம் இருக்கிறதா.

**அமைச்சர் சு.முத்துசாமி:** வீட்டு வசதி வாரியத்தினுடைய சார்பாக அப்படிப்பட்ட திட்டங்களை நாங்கள் எடுத்து செயல்படுத்த முடியாது. அதற்கென்று தனியாக துறைகள் இருக்கின்றன. எனவே, நீங்கள் தற்போது சொன்ன கருத்துகளை, அந்தத் துறையின் சார்பாக ஆய்வு செய்து, கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பார்கள். ஆனால், ஒன்றை நான் இங்கே சொல்ல வேண்டும். இலட்சக் கணக்கான நபர்களுக்கு இப்போது பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இவற்றையெல்லாம் ஏறத்தாழ ஒரு 30 ஆண்டு காலமாக ban செய்திருந்தார்கள். முதலமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாக பல இலட்சம் பேருக்கு இப்போது பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும் இங்கெல்லாம் அவை ban செய்திருந்ததை எடுத்து தற்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்காவது இடிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அது நீர்வழி புறம்போக்கு, court உத்தரவின் காரணமாக அது செய்யப்பட்டிருக்குமே யொழிய, அரசாங்கம் செய்தது அல்ல. இருந்தாலும், மற்ற துறையினுடைய சார்பாக அதை பாதுகாப்பதற்கான நடவடிக்கையை கண்டிப்பாக மேற்கொள்ளலாம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### மானாமதுரை தொகுதியில்

# தடுப்பணை கட்டும் பணியை விரைவுபடுத்துவீர்!

## சட்டப் பேரவையில் திருமதி ஆ.தமிழரசி வலியுறுத்தல்!

சென்னை, அக். 18 –

சட்டப் பேரவையில் மானாமதுரை ஆ.தமிழரசி கேட்ட கேள்வியும் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அளித்த பதிலும் வருமாறு:–



**திருமதி ஆ. தமிழரசி:** முதலில் தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கும், துறையினுடைய அமைச்சர், அவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் தொகுதியில் கேட்ட பல்வேறு கோரிக்கைகளை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தந்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன், என்னுடைய தொகுதியில் மளவாரநந்தல், செம்பியாரநந்தல், இடைகாட்டூர், பதினெட்டாம் கோட்டை ஆகிய பகுதிகளில் 1,000 ஏக்கர் பாசன வசதி பெற்று பயன்பெறும் முகமாக, தடுப்பணை கட்ட திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை அமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு விரைவாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** அப்படியே ஆகட்டும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### பாலக்கரை பெண்கள் மத்திய சிறையை மாற்றி - அப்பகுதியில்

# காந்தி மார்க்கெட் விரிவாக்கம் செய்யப்படுமா?

## சட்டப் பேரவையில் - இனிகோ இருதயராஜ் கேள்வி!

சென்னை, அக்.18–

சட்டப் பேரவையில் உறுப்பினர் இனிகோ இருதய ராஜ் கேட்ட கேள்வியும் அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பதிலும் வருமாறு:–



**முனைவர் த. இனிகோ இருதயராஜ்:** திருச்சியின் மையப்பகுதியான பாலக்கரை பகுதியிலே பெண்கள் மத்திய சிறைச்சாலை உள்ளது. நமது அறிவிப்பின்படி பெண்கள் மத்திய சிறைச்சா லையை திருச்சிக்கு வெளியே கொண்டுசென்றுவிட்டு, அந்தப் பகுதியில் Gandhi Market விரிவாக்கம் செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறோம். அந்த அறிவிப்பு எந்த நிலையில் உள்ளது என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் எஸ். ரகுபதி:** பெண்கள் சிறைச் சாலையை தனி இடத்திற்கு கொண்டுசெல்வதற்காக இடம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் கேட்டிருக்கின்றோம். இடம் கிடைத்தால் அதற்குப்பிறகு அங்கே கட்டடங்கள் கட்டி சிறைச் சாலை மாற்றித்தரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர், வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில், திருக்கோவிலூர் சந்தப்பேட்டை எம்.ஜெ.மஹாலில் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிளை கழக செயலாளர்கள் பாக முகவர்கள், பாக டிஜிட்டல் முகவர்களுக்கான சிறப்பு செயற்குழு கூட்டம் சிறப்புடன் நடைபெற்றது, இக்கூட்டத்தில் ச.அ.பெருநற்கிள்ளி, வசந்தம் க.வேலுசாமி ஆகியோர் ஆலோசனை வழங்கினர். இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாநகரில் நேற்று முன்தினம் நள்ளிரவில் கன மழை பெய்த நிலையில், மக்களின் அழைப்பை ஏற்று சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சரும், தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளருமான பெ.கீதாஜீவன் 4,6,7,11,16 மற்றும் 59 ஆகிய வார்டுகளுக்கு உட்பட்ட பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதுடன், அப்பகுதிகளில் தேங்கிய மழை நீரை அகற்றிடவும், மேலும் மழை நீர் தேங்காமல் இருக்கும் வகையிலும் சீரமைப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தினார். உடன் மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், மேகநாதன், மாமன்ற உறுப்பினர்கள் தெய்வேந்திரன், கண்ணன், ஜெயசீலி, ராஜதுரை, நாகேஸ்வரி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சின்னசேலம் பேரூராட்சி

# காந்தி நகருக்கு கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கிடுக!

## சட்டப் பேரவையில் சங்கராபுரம் – தா.உதயசூரியன் வலியுறுத்தல்!

*சென்னை, அக். 18-*

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது, சங்கராபுரம் தொகுதி தா. உதயசூரியன், சின்னசேலம் பேரூராட்சியில் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.



இது தொடர்பாக பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**தா. உதயசூரியன்:** சின்னசேலம் பேரூராட்சி, காந்தி நகர், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் கே.என். நேரு:** கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் பேரூராட்சியில் 18 வார்டுகள் உள்ளன. தற்போது, இப்பேரூராட்சியில் 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப் பின்படி மக்கள்தொகை 25,106 ஆக இருந்தது. தற்போதைய மக்கள்தொகை தோராயமாக 28,120 ஆகும். இப்பேரூராட்சியானது தென்பெண்ணை ஆற்றினை ஆதாரமாகக் கொண்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் கள்ளக்குறிச்சி கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின்மூலமும் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்கள்மூலமும் 1.968 MLD குடிநீர் பெறப்பட்டு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 70 LPCD வீதம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சிக்குட்பட்ட காந்திநகர் பகுதியில் 550 குடியிருப்புகளில் உள்ள சுமார் 2,500 மக்கள் வசித்து வருகின்றனர். தற்போது கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் குடிநீர் தங்குதடையின்றி வழங்குவதற்கு ஏதுவாக புதிதாக ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ரூ.53.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பணிகள் தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்படி பணிகள் முடிவுற்றவுடன் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமும் கிடைக்கப்பெறும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை காந்திநகர் பகுதியிலுள்ள பொதுமக்களின் பயன்பாட்டிற்கு போதிய அளவு வழங்கப்படும் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**தா. உதயசூரியன்:** திராவிட மாடல் ஆட்சியில் சங்கராபுரம் தொகுதியிலுள்ள சின்னசேலம் பேரூராட்சி, சங்கராபுரம் பேரூராட்சி மற்றும் வடக்கனந்தல் பேரூராட்சி ஆகிய பேரூராட்சிகளில் சிமென்ட் சாலைகள், *paver block* சாலைகள், கழிவுநீர் வாய்க்கால்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள், சங்கராபுரம் புதிய பேரூராட்சி அலுவலகம் மற்றும் சின்னசேலம் புதிய பேருந்து நிலையம் இவையெல்லாம் உருவாக்கப்பட்டிருக்கின்ற இந்த நல்ல வேலையில் முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாண்புமிகு பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். சின்ன சேலத்திலுள்ள 18 வார்டுகளில் 1990 ஆம் ஆண்டு ஐயா கலைஞர் அவர்கள்தான் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு திருக்கோவிலூர் சுந்தரேசபுரத்திலிருந்து அனுமதி கொடுத்தார்கள். ஆனால், இத்திட்டம் 1998 ஆம் ஆண்டில் முடிவடைந்தது. முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சி துறையினுடைய அமைச்சராக இருந்தபோது, அனைத்து கிணறுகளுக்கும் ஜெனரேட்டர் வசதி வேண்டுமென்று கேட்டபோது அதனை செய்து கொடுத்தார்கள். காந்திநகரில் உள்ள 9வது வார்டு மற்றும் 10வது வார்டுகளில் ஆதி திராவிடர் மக்கள் வாழ்கின்றனர்.

ஏற்கெனவே, மொத்தமுள்ள 18 வார்டுகளில் 16 வார்டுகளில் இரண்டு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. கிணற்றுத் தண்ணீரை கொடுப்பதற்கு ஒரு குழாயும், தென்பெண்ணை ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் வருகின்ற தண்ணீரை கொடுப்பதற்கு மற்றொரு குழாயும் பதிக்கப்பட்டு தண்ணீர் கொடுக்கப்படுகின்றது. ஆனால், காந்திநகரில் ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதியில் ஒரு குழாய் மட்டும் பதிக்கப்பட்டு கிணற்றுத் தண்ணீர் மட்டும்தான் கொடுக்கப்பட்டது. ஆகவே, நல்ல நீர் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினால்தான் சென்ற நிதிநிலை அறிக்கையில் இதற்காக நான் கோரிக்கை வைத்தேன். ஆகவே, ஒரு இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து, தற்போது முடியும் தருவாயில் உள்ளது. ஆனால், குழாய்கள் கொடுக்கின்றபோது ஒரு குழாய்தான் இருக்கின்றது. அதன்மூலம் கிணற்று தண்ணீர் கொடுக்கப்படுகின்றது. மேலும், சிமென்ட் சாலை, *paver block* சாலைகள் போடப்பட்டிருப்பதனால் *PVC* பைப்புகளை தோண்டி போட்டால் சாலைகள் பாதிப்படையும்.

ஆகவே, அமைச்சர் அவர்களிடம் *GI pipe* மூலமாக சாலை ஓரங்களில் குழாய்களை புதிதாக போடுவதற்கு 32 இலட்சம் ரூபாய் மதிப்பீடு 2692025 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலமாக கருத்துரு வரபெற்றிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் *GI pipe* மூலமாக காந்திநகர் மக்களுக்கு நல்ல குடி தண்ணீரை கொடுப்பதற்கு முன்வருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மறுசீரமைப்பு பணிகள்*Retrofitting* வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலே, பிளாஸ்டிக் குழாய்களுக்கு பதிலாக GI குழாய்கள் போடவேண்டுமென்று சொல்கிறார்கள். அதிகாரிகளோடு கலந்துபேசி, அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அப்பணிகளை செய்வதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படும். இப்போது 2021லே நம்முடைய முதல்வர் தளபதி அவர்கள் பொறுப்பேற்கின்றவரை, அங்கு நடைபெற்ற TWADமூலம் 3 இலட்சம் மக்களுக்கு 8 MLDயும், நகராட்சிமூலம் ஒரு இலட்சம் மக்களுக்கு 6 MLDயும், பேரூராட்சிகள்மூலம் 2 இலட்சம் மக்களுக்கு 11 MLDயும் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது முடிவுற்ற திட்டப்பணிகள் கடந்த 4 ஆண்டுகளில் TWADமூலம் கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள இரண்டு கூட்டுக் குடிநீர் திட்டங்களில் 6 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் 0.31 MLD கூடுதலாக வழங்கப்படும். தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற பணிகள் TWADமூலம் இரண்டு குடிநீர் திட்டங்கள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்திட்டம் முடிவுறும்போது கூடுதலாக 33 ஆயிரம் மக்களுக்கு ஒரு MLD குடிநீர் வழங்க இயலும். கள்ளக்குறிச்சி நகராட்சியில் இரண்டு குடிநீர் திட்டங்கள் ரூ.4 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. இத்திட்டம் முடிவுறும்போது கூடுதலாக பத்தாயிரம் மக்களுக்கு ஒரு MLD வழங்க இயலும். தற்போது புதிதாக அறிவிக்கப்பட்ட திட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள இரண்டு கூட்டுக் குடிநீர் திட்டங்களிலிருந்து ரூபாய் 45 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் 4 MLD தண்ணீர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் வழங்கப்படும். ஆக, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இத்திட்டங்கள் அனைத்தும் நிறைவுறும்போது கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள 14 இலட்சம் மக்களுக்குத் தேவையான 95 MLD குடிநீர் தாராளமாக வழங்க இயலும். காந்திநகர் பகுதியில் குழாய்களை மாற்றி, அங்குள்ள ஆதி திராவிட மக்களுக்கு நல்ல முறையிலே குடிநீரை வழங்குவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தா. உதயசூரியன்:** வடக்கனந்தல் பேரூராட்சியில் வெங்கடாம்பேட்டை 13 வது வார்டில் 1998 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதடையும் சூழ்நிலையில் உள்ளது.

ஆகவே, 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலம்தான் தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. மக்கள்தொகை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், ஒரு இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

சங்கராபுரத்தில் நரிக்குறவர் மக்கள் இருக்கிறார்கள். அதேபோல, சமத்துவபுரமும் இருக்கிறது. 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள்தான் அங்கு இருக்கின்றன. ஒருசேர, ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி கொடுத்துவிட்டால் தினமும் நல்ல தண்ணீர் வழங்குவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சங்கராபுரத்தில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், வடக்கனந்தல் பேரூராட்சி, வெங்கடாம்பேட்டையில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதால், அங்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** உறுப்பினர் அவர்கள் சங்கராபுரம் பகுதியிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி புதிதாக அமைக்கப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கையை இங்கு வைத்திருக்கிறார். பல்வேறு இடங்களிலே விரிவுபடுத்தப்பட்ட பகுதி என்கிற காரணத்தால் ஏற்கெனவே வழங்கப்பட்ட தண்ணீரைவிட கூடுதலாக தர வேண்டிய நிலைமை இருக்கிறது. பழைய நீர்த்தேக்கத் தொட்டிகளை மாற்றிவிட்டு புதிதாக கட்டுகிற பணியும் இப்போது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று, அதிகாரிகளோடு கலந்துபேசி, எவ்வளவு விரைவாக இதை செய்து தருவதற்கு வாய்ப்பு இருக்குமோ அதை செய்து தருவோம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.